BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

சமகாலச் சூழலில் படிம அரங்கின் தேவைப்பாடு

செல்வி. கந்தசாமி பிரித்தியா
ஆய்வாளர்
இள நுண்கலைமாணி
தொலைபேசி இலக்கம் - 0778054514
மின்னஞ்சல் முகவரி - prithykandasamy@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

வளர்ந்து வரும் அறிவியல் விஞ்ஞான உலகமயமாக்கல் சூழலின் காரணமாக ஒவ்வொரு மனிதனும் இயந்திரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றான். தன்னைப் பற்றி தானே சிந்திக்க முடியாத அளவுக்கு தனது சமூகம் பற்றிய விழிப்புணர்வு இல்லாமலும் அவனை முழு நேர அடக்கு முறைக்குள் வைத்திருக்கிறது நவகாலணித்துவம். அந்த வகையில் சமூக சூழ்நிலைகளில் காணப்பட்ட அடக்குமுறைகளில் இருந்து மனிதனை விழிப்புணர்வு செய்வதற்கும், அடக்குமுறைகளில் இருந்து வெளிக்கொணர்வதற்கும் அரங்கு என்பது ஒரு சக்திவாய்ந்த ஊடகமாக காணப்படுகின்றது. இவ்வாறு ஒரு சமூகம் தாம் இதுவரை பின்பற்றி வந்த அரசியல் பொருளாதார சித்தாந்த அடியாக இருந்த கலாச்சார பண்பாட்டிலிருந்தும் ஒரு சமூக மாற்றத்தையும், விடுதலையையும் பெற்றுத்தருவதே அரங்கின் நோக்கமாகும். இதற்கமைய அரங்க வரலாற்றைப் பொறுத்தவரையில் பல்வேறுபட்ட சவால்களையும், இடர் பாடுகளையும் தாண்டி காலத்தின் தேவைக்கு ஏற்ப அரங்குகள் பல பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன. அந்தவகையில்,

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு எதிராக நடக்கின்ற வன்முறைகளுக்கு எதிராக குரல்கொடுக்கின்ற வகையில் அரங்க வடிவமொன்று தேவைப்படுகின்றது. தற்கால நவீன உலகில் மக்கள் அனைவரும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அதாவது குடும்பத்தில் பிரச்சனை, வேலைத்தளத்தில் பிரச்சனை, சமூகத்தில் உறவினர்கள, நண்பர்கள் என ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

சிலர் இதனை எவ்வாறு தீர்ப்பது, யாரிடம் சென்று முறையிடுவது என்று தெரியாமலும் மற்றவர்களிடம் கூற முடியாமலும் தங்களது மனதுக்குள்ளேயே புதைத்து வைத்திருக்கின்றனர். இதனாலேயே மன உளைச்சலுக்கும், மன அழுத்தங்களுக்கும் ஆளாகி நிம்மதியற்ற வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். மேற்கூறப்பட்ட இத்தகைய இடர்களை நீக்குவதற்காக ஒகஸ்தா போல் ஒடுக்கப்பட்டவர்களுக்கான அரங்கினை தோற்றுவித்தார். அவ் அரங்க வடிவங்களில் ஒன்றாக காணப்படுவது ஆய்வாளராகிய என்னால் ஆய்வு செய்யப்பட்ட படிம அரங்கு ஆகும். இவ் அரங்கானது மக்களது உள்ளத்தில் புதைந்து கிடக்கின்ற பிரச்சனைகளை அவர்களாகவே வெளிப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கின்ற அரங்க வடிவமாகவும், பார்வையாளர்களை பங்காளர்களாக மாற்றுகின்ற ஒரு அரங்க வடிவமாகவும் காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் அரங்கம் என்பது இசைக்களிப்புடன் கூடிய பாசுரங்களாக இருந்தது. வெட்டவெளியில் சுதந்திரமாக மக்கள் பாடிய பாடல்கள் அவை.பின்னர் ஆட்சியாளர் அரங்கதை கைக்கொண்டனர். அப்போது ஒடுக்கப்பட்டோர் தமது விடுதலையை போராடிப் பெறவும், தமது கருத்துக்களை வெளியிடவும் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒகஸ்தா போல் அதே நாட்டைச் சேர்ந்த மற்றுமொரு அறிஞரான போலோ பிரேயரின் மூல சிந்தனையில் இருந்து படிம அரங்கைத் தோற்றுவித்தார்.

ஒகஸ்தா போல் உருவாக்கிய படிம அரங்கானது ஒரு வகையான விடுதலை நாடகமாகும். இவர் உருவாக்கிய இந்த அரங்க வடிவமானது தற்கால சமூகத்தில் என்ன தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது? சமகால சூழலில் பல அரங்க வடிவங்கள் இருந்தாலும் படிம அரங்கானது தனக்கென சில தனித்துவமான பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றது. தற்காலத்தில் இவ் அரங்கின் தேவைப்பாடும் நியாயப்பாடும், இவரங்குக்கும் பார்வையாளர்களுக்கும் இடையில் எத்தகைய உணர்வு காணப்படுகின்றது, இதன் பேசுபொருள் எவ்வாறு இருக்கும் போன்ற பல விடயங்களை பரிசீலனை செய்வதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்

படிம அரங்கு, அடக்குமுறை, அரங்கு, நவ காலணித்துவம், சமகாலச்சூழல், உலகமயமாக்கம், பண்பாடு

படிம அரங்கு

படிம அரங்கு என்பது ஒருவகையான விடுதலை நாடகமாகும். இதில் மக்கள் தமது உடலை சிற்பங்களின் பொருட்களாக பயன்படுத்தி iஅயபந ,iயெi உருவாக்குகின்றார்கள். அந்த iஅயபந மக்கள் மத்தியில், தான் கொண்டு வந்த தகவல்களைச் சேர்க்கின்றது. குரலை விட இவ் அரங்கில் உடலே பிரதானமாக காணப்படுவதோடு பொருள் சார்ந்த படிமங்களும் இணைந்து இவ் அரங்கினை கருத்தேற்றம் செய்கின்றது. "ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளை வர்ணிக்கின்றது என்பதையும், வார்த்தைகள் மீது நாம் அதிகமாக சார்ந்திருப்பது பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதற்கு பதிலாக குழப்பம் அல்லது குழப்பத்தை ஏற்படுத்தும் சில சந்தர்ப்பங்களில் படங்கள் நமது உண்மையான உணர்வுகளை கட்டியெழுப்பும் வகையில் அமையும்" என்பது இவ் அரங்கின் அடிப்படைக் கருத்தாகும்.

படிம அரங்கு என்பது நாடகத்தின் ஒரு பங்கேற்பு பணியாகும். ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளை பேசுகின்றது என்ற அடிப்படையில் உருவாக்கம் பெற்றது. இவ்வரங்கில் பார்வையாளர்கள் நேரடியாக பங்கேற்க வேண்டும் என ஒகஸ்தா போல் கூறுகின்றார்.இவ்வரங்கில் உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் துல்லியமாக செலுத்துவதோடு முகபாவம் உட்பட அனைத்தையும் காட்ட வேண்டும் எனவும், எக்காரணம் கொண்டு பேச முற்படக்கூடாது என தனது படிம அரங்கின் நிபந்தனையாக ஒகஸ்தாபோல் சுட்டிக்காட்டுகின்றார்.

மக்கள் எதிர்நோக்குகின்ற மன ரீதியான நடைமுறை வாழ்வியல் சிக்கல்கள், சவால்கள், ஒடுக் முறைகள், குடும்ப உறவுச் சிக்கல் என அனைத்து விதமான விடயங்களையும் பேசுபொருளாக பயன்படுத்துகின்றது. பார்வையாளர்கள் நேரடியாக தமது வாழ்க்கையில் அனுபவித்த சம்பவங்களை எடுத்துக்காட்டுவதுடன் அவர்களின் பங்கேற்பினை தூண்டுவது இவ்வரங்கின் பிரதான நோக்கமாக கருதப்படுகின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் பார்வையாளர்கள் வெறுமனே பார்க்கின்றவர்களாக மாத்திரம் இல்லாமல் பங்கேற்பாளர்களாகவும் அரங்க செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இவ்வாறு அவர்களது மனதிற்கு சிகிச்சை அளிக்கின்ற ஒரு அரங்க வடிவமாக படிம அரங்கு காணப்படுகின்றது.

சமகாலத்தில் படிம அரங்கு ஏன் தேவை

படிம அரங்கு என்பது ஒரு சக்தி வாய்ந்த நாடக வடிவம் ஆகும். இது சமகால சமூகத்தில் குறிப்பிடத்தக்க கவனத்தையும், பொருத்தத்தையும் பெற்றுள்ளது. இத்தகைய அரங்கு சமகாலத்தில் ஏன் தேவை என்பதனை ஆராய்வோமானால், இன்றைய வேகமான மற்றும் தொழில் நுட்பத்தால் இயங்கும் சமூகத்தில் தகவல் தொடர்பு பெரும்பாலும் குறுஞ்செய்தி மற்றும் சமூக ஊடக இடுகைகளாக குறைக்கப்படுகின்றது. உடல் மற்றும் கற்பனை மூலம் உணர்ச்சிகளையும், யோசனைகளையும் வெளிப்படுத்தும் திறன் பெருகிய முறையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சமூக மற்றும் அரசியல் வர்ணனைக்கான சக்தி வாய்ந்த கருவியாக செயல்படுகிறது. சமூக சமத்துவமின்மை , அமைதியின்மை மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள் ஆகியவற்றால் குறிக்கப்பட்ட ஒரு சகாப்தத்தில் கலைஞர்களின் மற்றும் ஆர்வலர்களுக்கு இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் மொழித் தடைகளைத் தாண்டி செல்லும் திறன் கொண்டது. அதாவது இக்காலம் உலகமயமாக்கப்பட்டதாக இருக்கின்றது. மொழியியல் பின்னணியில் உள்ளவர்கள் ஒன்று கூடி மொழிகள் முழுவதும் திறம்பட தொடர்பு கொள்ளும் திறன் மிக முக்கியமானது. அந்த வகையில் படிம அரங்கானது ஒரு உலகளாவிய மொழியை வழங்குகின்றது. இது பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பின்னணியில் உள்ளவர்களால் புரிந்து கொள்ளப்பட்டு பாராட்டப்படுகின்றது.

மேலும், இவ்வரங்கு சிகிச்சை பயன்களை கொண்டுள்ளது. தனி நபர்கள் தங்கள் உணர்ச்சிகளை பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலில் ஆராய்ந்து அதனை செயல்படுத்த அனுமதிக்கிறது. குணப்படுத்துதல் மற்றும் உணர்வுகளின் உருவகத்தின் மூலம் படிம அரங்கு குணப்படுத்தல் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை எளிதாக்குகின்றது. நீடித்த சமூக மாற்றத்தை உருவாக்கும் ஆற்றலை கொண்டுள்ளது. அதாவது அழுத்தமான சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமும் பார்வையாளர்களை அர்த்தமுள்ள விதத்தில் ஈடுபடுத்துவதன் மூலமும், நேர்மறையான மாற்றத்திற்காக வாதிடவும் மக்களை ஊக்குவிக்கும். அது மட்டுமல்லாமல் சமூக நெறிமுறைகளுக்கு சவால் விடுவதற்கும் நிறுவப்பட்ட அமைப்புக்களை கேள்விக்குள் ஆக்குவதற்கும் இவ் அரங்கு உதவுகிறது.

ஆகவே முடிவாக சொல்லப்போனால் படிம அரங்கானது சமகால சமூகத்தில் கலை வெளிப்பாட்டின் அவசியமான மற்றும் பதிப்பாக்க வடிவமாக, வாய்மொழியாக தொடர்பு கொள்வது, சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளை தீர்ப்பது, மொழித் தடைகளை தாண்டி செல்வது, செயலில் பங்கேற்பதை ஊக்குவித்தல், சிகிச்சை பலனை வழங்குதல், நீடித்த சமூக மாற்றத்தை உருவாக்குதல் என்பவற்றுக்கான இன்றியமையாத கருவியாக அமைகின்றது. இத்தேவைப்பாட்டைப் போன்றே சமகாலச் சூழலில் படிம அரங்கின் நியாயப்பாடும் காணப்படுகின்றது.

ஒரு சமூகம் மாற்றப்பட வேண்டுமெனில் அனைத்து நடைமுறைகளில் இருந்தும் விடுபட்டு சம உரிமை, சமத்துவம் பேணப்பட வேண்டும். அதேபோல் சமூகமாற்றப் பணியில் மக்களை ஒன்று திரட்டுவதற்கும், ஒன்று திரட்டி அவர்தான் பிரச்சனைகளை பேசுவதற்கு முதலில் அவர்களிடத்தில் உள்ள ஒடுக்கு முறைகளை தவிர்க்க வேண்டும். அந்த வகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களை வெளிக்கொணரவும்; இதுவரை இருக்கின்ற அரங்க வடிவங்களின் போதாமையினாலும் பல தளங்களில் படிம அரங்கு இன்றியமையாத தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஒரு சமூகத்தில் தற்கால சமூகப் பிரச்சினைகளை படிமத்தின் ஊடாக காட்டும் பொழுது அது சிலருக்கு தற்காலத்தில் இடம்பெறும் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதாக அமையும், இன்னும் சிலருக்கு வருங்கால பிரச்சினைகளை மையூட்டாக காட்டும், சில பேருக்கு ஏற்கனவே நடந்த ஒரு பிரச்சனையை அதாவது இறந்த கால பிரச்சனையை மையூட்டாக காட்டும். இதனை வைத்துக்கொண்டு பார்க்கும் பொழுது எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய வகையில் ஒரு விடயத்தினை சமூகத்துக்கு கொடுக்கக்கூடிய தன்மை படிம அரங்கிற்கு உண்டு என்பது நியாயப்பாடாக கருத முடியும். அதுமட்டுமல்லாமல் இன்றைய காலத்தில் உற்பத்திகள் பெரிதாக இல்லை எனவே மக்கள் யாவரும் விளம்பரத்தின் ஊடாகவும், அரசியலிலும் ஏகாதிபத்திய நாடுகளிடம் ஒடுக்கு முறைக்கு உட்பட்டு உள்ளோம் என்ற விழிப்புணர்வில்லாமலே இருக்கின்றோம். எனவே இத்தகைய நிலையில் இருக்கும் மக்களை ஒன்று திரட்டி அது சார்ந்த விழிப்புணர்வை படிம அரங்கினூடாக செயல்படுத்தலாம்.

சமகாலச் சூழலைப் பொறுத்தவரையில் பல வகையில் ஒடுக்கு முறைகள் ஆங்காங்கே நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவ் அரங்க முறைகள் வெவ்வேறு முறைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் நம் சமூகத்தில் அதிகளவானோர் தான் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருக்கின்றோம் என்பதை அறியாமலே இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் தங்கள் விடயத்தையும் தாம் இருக்கும் நிலையையும் கௌரவமாகக் கொள்கின்றனர். காரணம் ஒடுக்குபவர்கள் தங்கள் ஒடுக்கு முறையை நேரடியாக இல்லாமல் மறைமுகமாக அரசியல் ஊடாக அவர்கள் தங்களை கட்டுக்குள் வைத்துக் கொள்கின்றார்கள். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமாக இருக்கின்றது. ஏனைய அரங்க வடிவங்கள் முடிவுகளை, தீர்மானங்களை மட்டும் வெளிப்படுத்தும். ஆனால் இவ் அரங்கு நம் சிந்தனையை தூண்டினாலும் அது தொடர்பான சந்தேகங்களை முன்வைக்க பார்வையாளர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கும் ஒரு வடிவமாக காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துக்களின் மூலம் சமகாலச் சூழலில் படிம அரங்கின் தேவைப்பாடும் அதன் நியாயப்பாடும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது என்று சொல்லலாம்.

முடிவுரை

நமது சமூகமானது காலத்தின் தேவைக்கு ஏற்ப புதுமையும், பழமையும் ஒன்று சேர இணைந்து இரண்டையும் அடிநாதமாகக் கொண்டது. அந்த வகையில் உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தோற்றம் பெற்ற அரங்குகளும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன என்பதற்கு இந்த படிம அரங்கானது விதிவிலக்கு அல்ல. "சமகாலச் சூழலில் படிம அரங்கின் தேவைப்பாடு" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வுக் கட்டுரையானது படிம அரங்கினை பரீட்சித்து பார்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சிறு முயற்சி ஆகும். இவ் முயற்சி மூலம் ஏற்பட்ட அனுபவமே இவ் அரங்கு பற்றிய தேடலை மேற்கொள்வதற்கு எனக்கு உந்து சக்தியாக அமைந்தது. சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளில் படிம அரங்கானது பரந்துபட்ட பார்வையினை கொண்டுள்ளது. சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் கருவியாக இவ் அரங்கு காணப்பட்ட போதிலும் அரங்கவியலாளர்கள் இவ் அரங்கை குறைந்த அளவில் பயன்படுத்துவதற்கான காரணங்களை கண்டறிய வேண்டும் என தேடலை ஆரம்பித்த பொழுது படிம அரங்கினுடைய போதாமைகள், இன்றைய சமுதாயத்தில் படிம அரங்கு பற்றிய புரிதலின் போதாமை மற்றும் சவால் என்பன எனது ஆய்வினுடைய பிரச்சனையாக இருந்தது. ஆகவே இவ் அரங்கினுடைய பல்வேறு உத்திகளை தெரியப்படுத்துவதும், அதற்கு ஊடாக படிம அரங்கினை செயல்படுத்துவதுமே என்னுடைய பிரதான நோக்கமாகும்.

எனவே இந்த அரங்கை தற்கால சமூக மக்களின் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்து வைப்பதற்குன ஓர் ஊடகமாக கையாள வேண்டியது அரங்கவியலாளராகிய ஒவ்வொருவரினதும் பொறுப்பு , கடைமையும் ஆகும். ஒரு ஆய்வாளனாக இருந்தாலும் சரி அரங்காற்றுகையாளனாக இருந்தாலும் சரி என்ன நோக்கத்திற்காக அரங்கை உருவகித்தானோ அந்த நோக்கத்தினை நிறைவேற்றும் காலகட்டம் அல்லது நிறைவேற்றும் பட்சத்தில் இன்றைய சமுதாயத்தில் இருக்கின்ற பொருளாதார பிரச்சனை, அரசியல் பிரச்சனை, ஒடுக்குமுறை, துஸ்பிரயோகம், குடும்ப பிரச்சினை என்று சமூகம் எதிர் நோக்குகின்ற அனைத்து வகையான பிரச்சனைகளையும் வெளிப்படுத்த ஒகஸ்தாபோலால் உருவாக்கப்பட்ட இப் படிம அரங்கு வழிகோலுகின்றது.

இவ் அரங்கு அவரது காலத்தில் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்றைய காலத்தில் தங்களது அறிவுக்கு எட்டிய வகையில் தமது நிலைக்கு ஏற்ற வகையில் மீம்ஸ் தியேட்டர்களையும், பேசும் படங்களையும், கிறுக்கல் சித்திரங்களையும் வடிவமைத்து இனிவரும் காலங்களில் இவற்றை விட கருத்து பதிந்த வகையில் விடயங்களை தெளிவாகவும், துல்லியமாகவும் அடுத்தவர்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடிய வகையிலும் மறைமுகமாக படிம அரங்கின் தோற்றத்திற்காக வெளிப்படுத்தலாம்.

அந்த வகையில் ஆய்வாளராகிய நான் ஒரு அரங்க மாணவி என்ற வகையில் படித்த விடயங்களை வைத்துக்கொண்டு படிம அரங்கு சம்பந்தமான தகவல்களை திரட்டியுள்ளேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான படிம அரங்கைப் போல் இன்னும் எத்தகைய அரங்குகள் இருக்கின்றன என்பது பற்றி ஆராய முற்படும் பொழுது இலகுவாக மக்களை விடயங்கள் சென்றடைய கூடிய வழிமுறை ஏற்படும். இதனை மேற்கொள்வதனால் படிம அரங்கினை ஒகஸ்தாபோல் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தினாரோ அதே நோக்கம் நிறைவேற கூடிய வகையில் இருக்கும். அது மட்டுமல்லாமல் படிம அரங்கு பற்றிய புரிதல் பெரும்பாலும் இல்லாத காரணத்தினாலே அரங்க முயற்சிகள் இடம்பெறவில்லை என்ற கருத்தையும் இந்த இடத்தில் குறிப்பிடுவது ஆய்வாளரின் கடமையாகும். அத்தோடு இன்றைய காலப்பகுதியில் மிக மிகத் தேவைப்படுகின்ற அரங்க வடிவமாகவும் இவரங்கு காணப்படுகின்றது. அத்துடன் ஒரு நாடக காரனாக இருந்து கொண்டு புதியதொரு அரங்கை அறிமுகப்படுத்தி அதற்கு ஊடாக மக்கள் நன்மையடையக்கூடிய ஒரு ஆய்வு முறையாக ஆய்வாளரின் இவ் ஆய்வு முறையானது காணப்படுகின்றது எனவும் இனிவரும் காலங்களில் இது சம்பந்தமாக ஆய்வினை மேற்கொள்கின்ற ஆய்வாளர்களுக்கு ஒரு வித்தாக அமையும் எனவும் நம்புவதோடு படிம அரங்கினை பற்றிய புரிதலையும் அதில் பயன்படுத்தப்படுகின்ற உத்திகளையும் புரிந்து கொண்டு இனிவரும் காலங்களில் படிம அரங்கினைப் பயன்படுத்தி ஆற்றுகைகள் இடம்பெறும் என நம்புகின்றேன். இதனை அரங்கு சார்ந்த ஆழமான புரிதல் கொண்டவர்களும், சமூகப் போராளிகளாக மாறுகின்ற அரங்கவியலாளர்களாலே சாத்தியப்படுத்த முடியும். என்பதே ஆய்வாளரான எனது கருத்தாகும்.

உஷாத்துணை பட்டியல்

நூல்கள்

1. CHAREES.A, AND MARJA- ODILIALEALMC BRIDE, 1995, Augusto Boal theatre of the oppressed theatre, communication group, network.

2. சிவத்தம்பி.க, மௌனகேரு.சி, திலகநாதன்.க, 1996, அரங்கு ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம்.

3. மங்கை.அ, 2010, அரங்கம், அரசியல் அழகியல் - அரங்கக்கோட்பாடுகள் மாற்று.

4. மதுசூதனன். தெ, ஜீவாகரன், 1997, அரங்கின் பரிணாமங்கள், கலாசார மையம், சிவகுமார் கே.எஸ். அசையும் படிமங்கள்

5. சிதம்பரநாதன்.க, 1994, சமூகமாற்றத்துக்கான அரங்கு, சென்னை.

6. குணசேகரன்.கே.ஏ, முனைவர், 2016, ஒடுக்கப்பட்டோர் அரங்கில்,நியு+ செஞ்சுரி புக்கவுஸ் (பிரைவெட் லிமிடெட்) பக்-18

கட்டுரைகள்

7. ரூபன்.சி, 2020, September 1 11, ஒடுக்கப்பட்டோருக்கான பகுதி- 5

8. ரூபன்.சி, 2021, August 28 28, ஒடுக்கப்பட்டோருக்கான பகுதி- 9

9. The Drama Review, 34, Augusto Boal's the theatre of the oppressed Augusto Boal, 1990, Copin the head three Hypothesis The Drama Review, 34, no/ call.

இணையத்தளம்

10. http://natachathiravaasi.blogspot.com
11. http://www.russiaknowndge.com
12. https://ecampusintario.press.books.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.